2. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2006–2007, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006–2007 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணைநிதிநிலை அறிக்கை அளித்தல் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை @இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவையில் வைக்கப்பட்ட இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 3,973.59 கோடி ரூபாய் நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 1,118.00 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 669.56 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் மற்றும் எஞ்சிய தொகையான 2,186.03 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ள சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

3. வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்ததற்காகக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியம் வழங்க, கூடுதலாக 44.63 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. மேலும், கூட்டுறவு வங்கிகள், நபார்டு வங்கி மற்றும் மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை அரசே ஏற்றுக்கொண்டதால், கூடுதலாக 519.67 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – கூட்டுறவு" என்பதன்கீழ் 558.55 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

4. மாநிலத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சிறப்பு வழிவகை முன்பணமாக, அரசு 400 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு" என்பதன்கீழ் 400 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

@ அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 134 முதல் 137 வரையுள்ள பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.

2007 மார்ச் 29] [பேராசிரியர் க. அன்பழகன்]

5. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்குக் கூடுதலாக 160 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை" என்பதன்கீழ் ரூபாய் 1,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

6. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப் பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த, கூடுதலாக 39.50 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் 35.15 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

முற்பகல் 9–35

7. அவசரகால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதி குடும்பங்களுக்காக, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலமாக குடியிருப்புகளைக் கட்டுவதற்காக, கூடுதலாக 138.35 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை" என்பதன்கீழ் 59.04 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் மறு நிதியொதுக்கம் செய்வதன்மூலம் செலவிடப்படும்.

8. ஒருங்கிணைந்த சாலை வசதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு, கூடுதலாக 50.00 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் 29.22 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் மறு நிதியொதுக்கம் செய்வதன்மூலம் செலவிடப்படும்.

9. புதிய பேருந்துகள் வாங்குவதற்காக, சென்னை மாநகர்ப் போக்குவரத்துக் கழகத்திற்கு பங்கு மூலதனம் மற்றும் கடன் உதவி அளிப்பதற்காக கூடுதலாக 99.99 கோடி ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு நிவாரண உதவி வழங்குவதற்காக, கூடுதலாக 57.34 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2006—2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	48,80	..	..
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	2	..	..
3	நீதி நிருவாகம்	12	..	..
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	43,62,84	79,52	..
5	வேளாண்மைத் துறை	56,72,29	10,13,93	1,64,04
6	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு	30	36,37	..
7	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம்	8	..	..
8	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை– பால்வளம்	52,38	1	..
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	48,94,19	12,99,53	..

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரி மற்றும் பதிவுத் துறை—வணிக வரிகள்	18	..	..
11	வணிக வரி மற்றும் பதிவுத் துறை—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு	16,14,01	..	..
12	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—கூட்டுறவு	90,05,65	519,02,20	419,40,92
13	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு	5	..	400,00,00
14	எரிசக்தித் துறை	2	..	..
15	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	6	86,65	..
16	நிதித் துறை	10	..	1,30,00
17	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்	8	..	..
18	கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத்தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்	4,94,30	..	..
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	1,07	1	..
20	உயர் கல்வித் துறை	9,23,60	1	..
21	நெடுஞ்சாலைகள் துறை	8	10	..
22	உள் துறை—காவல்	148,73,77	17,32,89	..
23	உள் துறை—தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்	5	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

கோரிக்கை		வருவாய்	மூலதனம்	கடன்
24	உள் துறை–சிறைச்சாலைகள்	8	1	..
25	உள் துறை–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம்	15,92,03	..	..
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	5	..	..
27	தொழில் துறை	5	..	73,39,25
28	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–செய்தி மற்றும் விளம்பரம்	2,15,63	..	..
29	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா	12,98,09	4,89,96	..
30	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–எழுதுபொருள் மற்றும் அச்சு	7,16,24	10,00	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	5,97,66	3,73,56	..
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	35,14,63	4	75,82,25
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	3	..	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	5	1	..
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை	3,61,18	..	..
38	பொதுத் துறை	41	..	..
39	பொதுப் பணித் துறை–கட்டடங்கள்	6	14	..
40	பொதுப் பணித் துறை–பாசனம்	7	16	..
41	வருவாய்த் துறை	59,04,54	2,03,42	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2007 மார்ச் 29] [பேராசிரியர் க. அன்பழகன்]

	கோரிக்கை	வருவாய்	மூலதனம்	கடன்
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	14	42,33,57	..
43	பள்ளிக் கல்வித் துறை	168,57,06	..	..
44	சிறு தொழில்கள் துறை	7	50,00	..
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	32,35,45	1,15,20	..
46	தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை— தமிழ் வளர்ச்சி—பண்பாடு	6	..	..
47	தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை	58,28	..	..
48	போக்குவரத்துத் துறை	66,35	49,99,90	50,00,00
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,06,95	..	..
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	3	..	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	178,89,36	..	..
	பெருமொத்தம்	944,58,59	666,27,19	1,021,56,46

3. வரவு—செலவுத் திட்டம், 2007—2008, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007—2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS